**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 156/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **விஜயா என்கிற உஷா** | Caste | : |
| Father/Husband Name | : | **சக்கரைச்சாமி** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(All Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 05.08.2025**

**முதல் விசாரணை**

நான் இரட்டைகிணறு பகுதியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு மாலை 05.45 மணியளவில் இரட்டைகிணறு அருகே உள்ள எனது தோட்டத்தில் இருந்தேன். சத்தம்கேட்டது நான் சென்று பார்த்தேன். அப்போது அ.சா.1 மலர்கொடி கீழே விழுந்து கிடந்தார். அவரை நானும் அருகில் உள்ளவர்களும் தூக்கினோம். விசாரித்தபோது அ.சா.1 மலர்கொடி கழுத்தில் இருந்த 2 பவுன் தங்க நகையை இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் அத்து சென்றுவிட்டதாக என்னிடம் கூறினார். மேற்படி அ.சா.1க்கு முகத்திலும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயம் இருந்தது. பின்பு ஆம்புலன்சு மூலம் அவரை ஏற்றி கொண்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி கொண்டார்கள். என்னை விசாரணை செய்தவர் ஆண் போலீசார். அ.சா.1 எனது தங்கை மகள் ஆவார். நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது தங்கையின் மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கழுத்திலிருந்த ஒரு செயினை அத்துகொண்டு சென்றுவிட்டார்கள். இன்னொரு செயின் கீழே கிடந்தது.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2025.08.05 15:29:50 +0530